## ஹபுதளை நகர சபை

## பதுளை மாவட்டம்

-----------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரில் 08 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மே 23 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூன் 25 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, ஹபுதளை நகர சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

(அ) நகர அபிவிருத்தி அதிகார சபையில் இருந்து சபைக்கு அறவிடப்படவேண்டிய ரூபா 74,824 இற்கான மின் கட்டணத்தை கடன்பட்டோரின் கீழ் கணக்கீடு செய்யப்படாமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடன்பட்டோர் அதே தொகையால் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டண வருமானத்தை கணக்கிட்டு கணக்கீடு செய்திருக்காமையால் ஆண்டிற்கான வருமானம் மற்றும் ஆண்டு இறுதியில் உள்ளவாறு கடன்பட்டோர் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 451,625 இற்கான நிலையான வைப்புக்களுக்கான வட்டி வருமானத்தை மீண்டும் முதலீடு செய்தல் நாட்குறிப்பு இலக்கம் 9 மற்றும் 10 இன் மூலம் கணக்கீடு செய்யும் போது மீதிகள் சமப்பட்டமையால் மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானம் மற்றும் வருட இறுதியில் உள்ளவாறு முதலீடுகள ரூபா 451,625 வீதம் குறைவாக நிதிக் கூற்றுக்ளில் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) நிதிக் கூற்றுக்களுடன் சமர்பித்திருந்த நிலையான சொத்துக்கள் பட்டோலைகளின் பிரகாரம் ரூபா 286,550 இற்கான சொத்துக்களின் பெறுமதியை கணக்கீடு

செய்யாமையால் வருட இறுதியில் உள்ளவாறு மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்பு கணக்கு மீதி மற்றும் நிலையான சொத்துக்கள் கணக்கு மீதி அதே தொகையால் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(உ) மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சில் இருந்து சபைக்குக் கிடைத்திருந்த ரூபா 265,000 இற்கான 10 பல்கரும நடமாடும் கடைகளின் பெறுமதியை கணக்கீடு செய்யப்படாமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சொத்துக்களின் பெறுமதி மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்பு கணக்கின் மீதி ரூபா 265,000 வீதம் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஊ) கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம், சபைக்கு சொந்தமான 12 காணிகள் மற்றும் கட்டடங்களின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் வைப்புக் கணக்கின் மீதி ரூபா 7,340,434 ஆக காணப்பட்ட போதிலும், வைப்பு பதிவேட்டின் பிரகாரம் அவை ரூபா 7,499,149 ஆக காணப்பட்டமையால் ரூபா 158,715 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 15,697,837 ஆக காணப்பட்டதுடன், செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 32,399,330 ஆகும்.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

ரூபா 1,176,386 தொகை பெறுமதியான 02 கணக்கு விடயங்களுக்கான விவரமான பட்டோலைகள், மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் மற்றும் குறிப்பிட்ட மதிப்பளிக்கப்படாத காசோலைகளின் விபரங்கள் சமர்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

---

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமில்லாத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) நகரசபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) பிரிவு 164 | சுற்றுலா அபிவிருத்தி சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தங்குமிடங்களில் இருந்து முன்னைய ஆண்டிற்கான பெறுவனவுகளில் நூற்றிற்கு 1 இனை மிகைக்காத தொகையொன்றினை குறிப்பிட்ட வருடத்தின் அனுமதிப்பத்திர கட்டணம் என |

| | |
|---|---|
| | அறவிடப்பட வேண்டும் எனினும் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நடத்தப்படுகின்ற அவ்வாறான 02 தங்குமிடங்களில் இருந்து அவ்வாறு கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை<br>------------------------------------------------------------<br>நி.பி. 371 | சபையினால் 1997 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரையான காலப்பகுதியில் 14 சந்தர்ப்பங்களில் பல்வேறு சாராருக்கு செலுத்தியுள்ள ரூபா 295,181 இற்கான முற்பணங்களை தீர்த்திருக்கவில்லை. |
| (இ) இலங்கை குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் XXIV பிரிவுகள் 1:6 மற்றும் 4 | சபையில் கடமையாற்றிவிட்டு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள, சேவையை விட்டு சென்றுள்ள மற்றும் இறந்துள்ள 25 ஊழியர்களிடம் 03 வருடம் முதல் 18 வரையான காலம் முதல் அறவிப்படாமல் காணப்படும் ரூபா 43,576 இற்கான பதவியணிக் கடனை அறவீடு செய்திருக்கவில்லை. |
| (ஈ) உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 திகதிய 1980/46 இலக்க சுற்றுநிருபம் | i. சபைக்குச் சொந்தமான கடைகளுக்காக மாதாந்த வாடகை, சுற்றுநிருப ஏற்பாடுகளின் படி பெறுமதி மதிப்பீடு செய்யப்படாமல் சபை தீர்மானித்துள்ள சந்தை பெறுமதிக்கு ஒத்து வராத குறைந்த வாடகைத் தொகை ஒன்று அறவிடப்பட்டு காணப்பட்டது.<br><br>ii. கடை ஒன்றினை வாடகைக்குப் பெற்றிருந்த வாடகையாளர் சுய விருப்பத்துடன் வாடகை உடன்படிக்கையை இரத்துச் செய்யும் சந்தர்ப்பத்தில் அக்கடையை சபைக்கு உரித்தாக்கப்பட்டு மீண்டும் கேள்வி கோரப்பட்டு வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனினும் சபையினால் 09 சந்தர்ப்பங்களில் மீண்டும் கேள்வி கோரப்படாமல் பெயர் மாற்றம் செய்யும் கட்டணம் ஒன்றினை மாத்திரம் அறவீடு செய்து வாடகை உரிமையை வழங்கியுள்ளது. |

## 2 நிதி மீளாய்வு

---------------------

### 2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,954,082 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,913,515 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 6,959,433 இற்கான பிரதிகூலமான முரண் ஒன்று அவதானிக்கப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

--------------------------------

2.2.1 வாடகை

-------------

சபைக்குச் சொந்தமான 188 கடைகளில் இருந்து 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 3,960,170 இற்கான கடை வாடகையினை அறவீடு செய்திருக்கவில்லை.

2.2.2 வாடிவீட்டு முகாமைத்துவக் கட்டணம்

------------------------------------------------------------

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வாடி வீட்டை நிருவாகம் செய்த 1999 முதல் 2007 வரையான காலப்பகுதி தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 3,974,194 இற்கான வாடிவீட்டு வாடகை மற்றும் வாடிவீட்டு முகாமையாளரினால் கொடுப்பனவு மேற்கொள்ளத் தவறியயைால் சபையினால் தீர்க்கப்பட்ட ரூபா 74,824 இற்கான மின் கட்டணத்தினால் சபை அறவீடு செய்திருக்கவில்லை.

2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்

------------------------------------------------------------------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டண வருமானம் கீழே தரப்பட்டுள்ளது.

| | ரூபா |
|---|---|
| நீதி மன்றத் தண்டப் பணம் | 217,083 |
| முத்திரை கட்டணம் | 707,569 |

3 செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

பல்கரும கட்டடத்தில் காணப்படும் 02 உத்தியோகபூர்வ வாசஸ்தளங்களுக்காக ரூபா 70,544 தொகை ஒன்று செலவிடப்பட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அத்துடன் அந்த உத்தியோக வாசஸ்தளங்கள் நிர்மாணிக்கப்பட்டு சுமார் 02 வருட காலம் கடந்துள்ள போதும் பயன்படுத்தப்படாமல் மூடப்பட்ட நிலையில் காணப்பட்டது.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்